| | | |
|---|---|---|
| O.S No. | : | 59/2018 |
| DATE | : | 05.08.2025 |
| NAME | : | பொன்னுரங்கம் |
| தந்தை பெயர் | : | முருகன் |

<u>1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்து கோவிந்தவாடி கிராமத்தில் உள்ளது. அதன் பழைய சர்வே எண் மற்றும் புதிய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து யாரிடம் இருந்து எப்போது கிரையம் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியாது, பூர்வீக சொத்தாகும். 2ம் பிரதிவாதி எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். 2ம் பிரதிவாதியின் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுமார் 50 வருடங்களாக தாவா சொத்திற்கு பக்கத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா வாங்கியுள்ளேன், அந்த பட்டாவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு அவர்களது சொத்து எவ்வாறு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர்களது பூர்வீக சொத்து அவரது பெரியப்பாவிடம் இருந்து வந்தது. 2ம் பிரதிவாதி ராகவனின் மனைவி பெயர் சுருளி ஆகும். எனது சொத்தின் அகலம் 36 அடி, நீளம் 250 அடி ஆகும். 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் இருக்கிறார். அவரது வீட்டின் 16 அடி அகலம் 250 அடி நீளம் ஆகும். 1ம் பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அவர்களது சொத்து சம்மந்தமாக நாங்கள் எந்த வில்லங்கமும் பார்க்கவில்லை.

3. 18.09.2009ல் 1ம் பிரதிவாதி எழுது வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 250 அடி என்று குறிப்பிட்டுவிட்டு பின்னர் 2018ல் அதை அளந்து பார்த்து 16 அடிக்கு 103 அடி என்று திருத்தல் பத்திரம் எழுதிவிட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

அசல் வழக்கு எண் 173/2012 நான் தாக்கல் செய்திருந்தேன் அந்த வழக்கின் பிராது நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கை இந்த வழக்கின் அதே வழக்கு மூலத்திற்காக தான் தாக்கல் செய்தேன்.

4. நான் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் அது சம்மந்தமாக பாலுசெட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் அதில் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரணைக்கு அழைத்தார்கள் ஆனால் விசாரணை எதுவும் செய்யவில்லை. பிரதிவாதிகளின் சொத்து என்பதால் அவர்களை கட்ட சொன்னார்கள் அதனால் தான் காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்த பகுதியை அளந்து பார்க்க வழக்கறிஞர் ஆணையர் மனு தாக்கல் செய்திருந்தேன். ஆணையர் யாரும் வந்து எனது இடத்தை அளந்து பார்க்கவில்லை.

5. பிரதிவாதிகளின் சர்வே எண் மற்றும் பட்டா எண் தெரியாது. 1967ற்கு முன்பு தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்றால் பழனி அவரது மகன் சங்கர், ஜெகன்நாதன், மணி, ஏழுமலை மற்றும் மற்றொரு பகுதியை ராமச்சந்திரனிடம் இருந்து வாங்கினேன். வீட்டு வரி ரசீது 2017ல் வாங்கியதை தாக்கல் செய்துள்ளேன், அதன் பின்பு வீட்டு வரி கட்டவில்லை என்று சொன்னால் சரிதான். ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று சொல்வது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வேயர் வைத்து அளந்தோமா என்றால் இல்லை.

**மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.